## தமிழ்நாட்டில் உள்ள - 105 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில்

# மேலும் 3.959 குடியிருப்புகள் கட்டித் தரப்படும்!

### சட்டப் பேரவையில் - வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் - அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அறிவிப்பு

**சென்னை, ஜூலை 2 -**

**சட்டப் பேரவையில் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், "தமிழ் நாட்டில் உள்ள 105 இலங்கைத் தமிழர் முகாம்களில் மேலும் 3,959 குடியிருப்புகள் கட்டப்படும்" உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்டார்.**

சட்டப் பேரவையில் அமைச்சர் கே.எஸ். மஸ்தானின் பதிலுரை வருமாறு:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் அவர்களை வணங்கி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை சார்பாக எனக்கு இந்த மன்றத்தில் பேச வாய்ப்பளிக்கின்ற தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்கி, வெளிநாடு வாழ் தமிழர் நலன் தொடர்பான மானியத்தில் பங்கு கொண்டு "நமக்கு நாமே"மற்றும் "அண்ணா மறுமலர்ச்சி"ஆகிய திட்டங்களை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நமக்கு உருவாக்கிக் கொடுத்த இந்த நல்ல நாளில் வெளிநாடு வாழ் தமிழர் நலன் தொடர்பான மானியத்தில் பங்கு கொண்டு தங்கள் அரிய கருத்துகளை தெரிவித்துப் பேசிய உறுப்பினர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்து, அவை முன்னவர் அடங்கிய அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்து, தேமதுர தமிழோசை உலகெங்கும் பரவ வகை செய்த கலைஞர் அவர்கள் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புலம்பெயர் தமிழர்; மறுவாழ்வு தேடி வந்த தமிழர் என்று வித்தியாசம் கருதாது அனைவரது வாழ்வு மேம்பாட்டிற்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்.

அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று 2011ம் ஆண்டில் கலைஞர் எடுத்துக் கொண்ட முயற்சி தளபதியார் அவர்களால் 24.12.2022ல் நிறைவேறியது.

அயலகத் தமிழர் நல வாரியத்தை கட்டுருவாக்கி அதன் வாயிலாக இந்தியாவிற்கு வெளியே வசிக்கின்ற தமிழர்களுக்கு விபத்துக் காப்பீட்டுத் திட்டம், ஓய்வூதியத் திட்டம், அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் திருமண உதவித்தொகை வழங்கும் திட்டம், சிறு தொழில் தொடங்குவதற்கான கடனுதவித் திட்டம் ஆகியவற்றை வழங்குவதற்காக வழிவகை செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாட்டிலிருந்து இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும், உலகின் மற்ற நாடுகளுக்கும் பணியின் நிமித்தமாக புலம்பெயர்ந்து வாழுவோருக்கும், இந்தியர்கள் அல்லாத வெளிநாடுகளைச் சார்ந்த வம்சாவளித் தமிழர்களுக்கும்; வெளிநாடுகளில் இருந்து மறுவாழ்வும், புகலிடமும் தேடி தாய் தமிழ்நாட்டிற்கு வருவோருக்கும் அரணாக விளங்கி வருவது திராவிட முன்னேற்ற கழக அரசு என்பதை நாடு அறியும்.

புலம்பெயர்ந்து வாழுகின்ற இந்தியத் தமிழர்களும் வெளிநாடுகளை தாயகமாகக் கொண்டு வாழுகின்ற வம்சாவளி தமிழர்களும் சேர்ந்து அவர்களின் எண்ணிக்கை இரண்டு கோடிக்கு மேல் இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது.

தமிழருக்கு ஓர் இன்னல் ஏற்படும் போதெல்லாம் அது தமக்கு ஏற்பட்டதாக கலங்கி துடித்தவர் கலைஞர். அவர் வழிவந்த நமது முதலமைச்சர் அவர்கள் "உலகில் எந்த தமிழரும் அகதி அல்ல; அவர்களுக்கு துணையாக நான் இருக்கிறேன்" என்று எடுத்துச் சொல்லி அகதி என்ற வார்த்தையை கைவிட்டு இலங்கை தமிழர்களின் "அகதிகள் முகாம்" என்ற வார்த்தையை "மறுவாழ்வு முகாம்" என்று மாற்றி அமைத்தவர் தமிழக முதலமைச்சர் அவர்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி, வேலைவாய்ப்பு வேண்டி வெளிநாடுகளுக்கு சென்று அங்கு எதிர்பாராத விதமாக ஏற்படக் கூடிய பிரச்சினைகளின் காரணமாக சிக்கித் தவிக்கின்ற தமிழர்களை தாயகம் மீட்டு வருகின்ற பணியினை சிறப்பான முறையில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அந்த வகையில் RussiaUkraine போரினால் உக்ரைன் நாட்டில் சிக்கித் தவித்த 1,890 மாணவர்களும், IsraelPalestine பிரச்சனையினால் இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த 121 தமிழர்களும்; Sudanலிருந்து 281 பேரும்; Indonesiaல் இருந்து 3 பேரும்; Iran நாட்டிலிருந்து 6 பேரும்; Kuwaitல் இருந்து 34 பேரும்;

Omanலிருந்து 27 பேரும்; Malaysiaல் இருந்து 4 பேரும் மீட்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளளார்கள் முதலமைச்சர் அவர்களுடைய உதவியோடு.

பேரவைத் தலைவர் அவர்களே, Cambodia, Thailand மற்றும் Myanmar ஆகிய நாடுகளில் தொழில்நுட்பத் துறையின் மூலமாக பணி என்ற தவறான விளம்பரங்களை நம்பி அங்கு சென்று சட்டவிரோத செயல்களில் ஈடுபட கட்டாயப்படுத்தப்பட்ட தமிழர்கள் 126 பேர் பாதுகாப்பான முறையில் தாயகம் அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள்.

இவை தவிர, இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்தும் தமிழர்கள் மீட்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் அமர்நாத்திற்கு புனித பயணம் மேற்கொண்ட 17 பேர்; மணிப்பூர் கலவரத்தின் போது அங்கு சிக்கித் தவித்த 8 தமிழர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் பணி நிமித்தம் சென்று அங்கு காலமாகிவிட்ட தமிழர்களின் உடல்களை தாய்நாடு கொண்டு வந்து அவர்களின் உறவினர்களிடம் சேர்ப்பதில் தமிழ்நாடு அரசாங்கம் முதலமைச்சரினுடைய ஆலோசனையின்பேரில் சிறப்பாக பணியாற்றுகின்ற இந்த தருணத்தில் கழக அரசு பதவியேற்ற 752021 முதல் இதுவரையிலும் 729 பூத உடல்கள் கொண்டுவரப்பட்டு, தமிழ்நாடு அரசின் இலவச அமரர் ஊர்தி சேவைமூலம் குடும்பத்தாரிடம் அவர்களின் வீட்டிற்கே சென்று உடல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில்கூட கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தைச் சார்ந்த குவைத் நாட்டில் இறந்த இருவரது உடல்களை தாயகம் கொண்டு வந்து உறவினர்களிடத்திலே ஒப்படைத்து முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து காலமானவர்களின் குடும்பத்தாருக்கு தலா 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை நேரடியாக முதலமைச்சர் அவர்கள் சார்பாக நான் வழங்கியிருக்கின்றேன்.

**குவைத் தீ விபத்து!**

குவைத் நாட்டில் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தங்கியிருந்த கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த 7 தமிழர்களின் பூத உடல்களை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் கேரள மாநிலம், கொச்சி விமான நிலையத்திற்குச் சென்று உடல்களைப் பெற்று அவர்களுடைய உறவினர்களிடத்திலே ஒப்படைக்க, தமிழ்நாடு அரசின் அவசர ஊர்திகள் மூலம் அவர்களின் சொந்த ஊருக்கு அனுப்பி அடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இயற்கை எய்திய 7 நபர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகை ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை உடனடியாக வழங்கப்பட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பணிபுரிந்துவரும் தம்பதியரின் உடல்நலம் குன்றிய மகளை இந்தியாவிற்கு அழைத்து வரும்போது எதிர்பாராத விதமாக உடல்நலக் குறைவு ஏற்பட்டதை அடுத்து துருக்கியின் தலைநகர் அங்காரா நகரில் விமானம் தரையிறக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த குழந்தையின் செய்தியை முதலமைச்சர் அவர்கள் அறிந்து, உடனடியாக ஆணையிட்டு, குடும்பத்தினருடன் அரசு செலவில் தாயகம் கொண்டு வந்து குடும்பத்தினரிடம் கடந்த ஆண்டு ஒப்படைக்கப்பட்டது.

அயல்நாடுகளில் பணிபுரியும்போது இயற்கை



எய்தும் தமிழர்களுக்கான இழப்பீடு, ஊதிய நிலுவைத் தொகை, தவறாக செயல்படுகின்ற முகவர்கள் மீதான புகார், வேலைவாய்ப்பு தொடர்பான புகார்கள் என இதுவரையிலும் 800க்கும் மேற்பட்ட மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் கல்வி கற்று வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு சிறப்பான முறையில் வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த ஊர்களை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் 'எனது கிராமம்' திட்டத்தின்கீழ் கிராம மேம்பாட்டு திட்டங்களுக்கு குறிப்பாக மருத்துவம், கல்வி, கிராம முன்னேற்றம் போன்றவற்றில் நிதியுதவி புரிய கவனம் செலுத்தும் வகையில் SOP வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரையிலும் 3 பயனாளிகளிடமிருந்து இத்திட்டத்திற்கு 60 இலட்சம் ரூபாய் நிதி பெறப்பட்டுள்ளது.

**வெளிநாட்டுத் தமிழர்கள் முதலீடுகள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில் வெளிநாடுகளில் வசிக்கின்ற தமிழர்கள் தமிழ்நாட்டில் முதலீடுகளை பாதுகாப்பான முறையில் மேற்கொள்வதற்காக வழிகாட்டுதல் வழங்க வலைதள சேவை விரைவில் துவக்கப்படவுள்ளது.

அயலகத் தமிழர்கள் பங்கு பெறும் தமிழ் சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, அனைத்து தமிழ் சங்கங்களையும் ஒன்றிணைத்து கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டு பரிமாற்ற நிகழ்ச்சிகளை நடத்தும்பொருட்டு சுழல் நிதியாக 4 கோடி ரூபாயை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். இத்தொகையினைக் கொண்டு அயலகத்தில் தமிழ் பாரம்பரிய கலை மற்றும் இலக்கிய, பண்பாட்டு பரிமாற்ற நிகழ்ச்சிகளை தங்களுக்குள்ளும், வெளிநாட்டினர் பார்வையிடும் வகையிலும் நடத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அயலகத்தில் வசித்து வருகின்ற தமிழ் வம்சாவளி குழந்தைகளுக்கு தமிழ் மொழி, கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டு நெறிகளை அறிமுகப்படுத்தும்பொருட்டு தமிழ் இணைய வழி கழகம் மூலமாக தமிழ் சங்கங்களை ஒருங்கிணைக்க 2022-2023ம் நிதியாண்டிற்கு 12 இலட்சம் ரூபாயும், கடந்த நிதியாண்டில் 44 இலட்சம் ரூபாயும் தமிழ் சேவை கல்விக் கழகத்திற்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

"உலக தமிழர் தினம்" ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதம் 12 ஆம் தேதி சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த விழாக்களின் மூலமாக உலகத் தமிழர்கள் ஒருங்கிணைக்கப்படுவதுடன் விழாவிற்கு நேரடியாக வருகை தர இயலாத தமிழர்கள் இணைய வழியில் பங்கு பெற பெரும் ஆவல் கொண்டுள்ளார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு மே மாதம் 24 ஆம் தேதி சிங்கப்பூர் சென்றிருந்த போது அங்கு வசிக்கக்கூடிய தமிழர்கள் மத்தியில் "வேர்களைத் தேடி" என்ற திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அயலகத்தில் வசிக்கின்ற தமிழர்களின் குழந்தைகளை தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து தமிழ்நாட்டின் பாரம்பரியமான கலை, பண்பாட்டு மையங்களை பார்வையிடுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

அதன் தொடக்க நிகழ்ச்சியாக, 27.12.2023 முதல் 10.1.2024 வரை 15 நாட்களுக்கு ஆஸ்திரேலியா, ஃபிஜி, இலங்கை மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து 57 மாணவமாணவியர் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்துவரப்பட்டனர். மாமல்லபுரத்திலிருந்து புறப்பட்ட இவர்களின் பயணம் தமிழ் பண்பாடு, கட்டடம், கோவில் அன்றாட வாழ்வின் தனித்துவம் புரிந்துகொள்ளும் வகையில் தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி, திருச்சி, செஞ்சி, காஞ்சிபுரம் உள்ளிட்ட நகரங்கள் வழியாக சென்னையில் நிறைவு எய்தியது.

பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெற்ற போர் சூழலின் காரணமாக உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போது அங்கிருந்து புகலிடம் தேடி தமிழ்நாடு வந்த தமிழர்கள் ஆங்காங்கே முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு அங்கு தங்க வைக்கப்பட்டனர். அந்த வகைகளில் தமிழ்நாட்டில் தற்போது 105 முகாம்கள் உள்ளன. இம்முகாம்களில் 19,574 குடும்பங்களை சேர்ந்த 57,772 இலங்கை தமிழர்கள் வசித்து வருகிறார்கள்.

முகாம்களுக்கு வெளியேயும் வெளிப்பதிவில் 13,230 குடும்பங்களைச் சேர்ந்த 32,962 தமிழர்கள் வசித்து வருகிறார்கள். கொரோனா பெருந்தொற்றின் போது தமிழக மக்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு நான்காயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டதைப் போன்று முகாமிற்கு உள்ளே, வெளியே இருக்கின்ற தமிழர்களுக்கும் இந்த உதவிகள் முதலமைச்சர் அவர்கள் மூலமாக செய்து தரப்பட்டது.

கடந்த ஆண்டு ரூபாய் 5,42,76,869 செலவில் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு துணிமணிகள் வழங்கப்பட்டன. 2,50,54,930 ரூபாய் செலவில் 19,498 குடும்பங்களுக்கு பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

பேரவைத் தலைவர் அவர்களே, 2021 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் 6,933 குடும்பங்களுக்கு 5,26,27,000 ரூபாய் செலவில் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த எரிவாயு இணைப்புகளுக்கு ஆண்டுக்கு 5 எரிவாயு உருளைகளுக்கு தலா ரூபாய் நானூறு வீதம் மானியம் வழங்கும் வகையில் 17,229 இலங்கை தமிழர் குடும்பங்களுக்கு 3,44,58,000 ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டிற்கு 1,825 மாணவ, மாணவியருக்கு 3,28,49,878 ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டுக்கு 1,548 இளநிலை கலை மற்றும் அறிவியல் பயிலும் மாணவ மாணவியருக்கு 1,93,14,000 ரூபாயும், 186 இளநிலை பொறியியல் மற்றும் வேளாண் பொறியியல் பயிலும் மாணவ - மாணவியருக்கு 1,27,5,128 ரூபாயும், 118 முதுநிலை மாணவ மாணவியருக்கு 37,31,376 ரூபாயும் கல்வி உதவித் தொகை விரைவில் வழங்கப்படும்.

321 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 75 ஆயிரம் வீதமும், புதிதாக தோற்றுவிக்கப்படுகின்ற 300 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 1,25,000 ரூபாயும் என மொத்தம் ரூபாய் 6,15,75,000 ரூபாய் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, புதிதாக துவக்கப்பட்டுள்ள 256 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக 3,26,20,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள்!**

முகாம்களில் வசிக்கின்ற இலங்கை தமிழர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் முதல் தவணையாக 169,65,90,750 ரூபாய் செலவில் 3,510 வீடுகளும், இரண்டாம் கட்டமாக 228,64,49,000 ரூபாய் செலவில் 3,959 வீடுகளும் கட்டுவதற்காக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருந்தார்கள். வேலூர் நகரில் இதற்கென அடிக்கல் நாட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை அதே முகாமில் பல்வேறு முகாம்களைச் சார்ந்த 1,751 குடும்பங்களுக்கு வீடுகளை ஒப்படைத்தார்கள். முதற்கட்ட வீடுகளில் இதுவரையிலும் 2,448 வீடுகள் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. 700 வீடுகள் ஒப்படைப்பதற்கு தயார் நிலையில் உள்ளன. மேலும், 362 வீடுகள் கட்டுமான பணியின் கடைசி நிலையை எட்டி உள்ளன. இரண்டாம் தவணையாக 3,959 வீடுகள் கட்டுவதற்கு ஊரக வளர்ச்சித் துறைக்கு ஆணைகள் வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் துவங்குகின்ற நிலையில் உள்ளன.

குடியுரிமை உள்ளிட்ட இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்க துணை ஆலோசனை குழுவும், அன்றாட வாழ்க்கை மேம்பாட்டுக்கு ஒரு துணை ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டு பிரச்சனைகள் ஆராயப்பட்டு வருகின்றன. நீண்ட கால தீர்வு காண துணைக் குழுவின் இடைக்கால அறிக்கை முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

9.9.1969 அன்று பதிவு செய்யப்பட்டு 19.11.1969 முதல் செயல்பாட்டிற்கு வந்த தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி என்று அழைக்கப்படுகின்ற ரெப்கோ வங்கி இலங்கை பர்மா வியட்நாம் மற்றும் பிற நாட்டின் பிற நாடுகளில் இருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக நிறுவப்பட்டது.

1984 ஆம் ஆண்டு பல மாநில கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின்கீழ் இயங்கி வருகின்ற ரெப்கோ வங்கி தற்போது தமிழ்நாட்டு, ஆந்திர பிரதேசம் தெலுங்கானா கர்நாடகா கேரளா ஆகிய மாநிலங்களிலும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் இயங்கி வருகின்றது. இந்த வங்கியின் தலைமையிடம் சென்னையில் உள்ளது. பெரும்பகுதியான கிளைகள் தமிழகத்தில் அமைந்துள்ளன. இவ்வாண்டு வங்கியின் நிகர லாபம் 90 கோடி ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கும் நிலையில் தற்போது பயன் பெற்றுள்ள 45 ஆயிரம் பயனாளிகளின் எண்ணிக்கை 50 ஆயிரத்திற்கும் மேல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**அறிவிப்புகள்!**

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை

**1) மண்டபம் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்**

மண்டபம் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு தொழில் வாய்ப்புகளை உருவாக்கி, முகாம் மக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைவதுடன், அவர்கள் சுயசார்புடன் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

**2) இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் சாலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய் வசதிகள் மேம்படுத்துதல்**

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் சாலைகள் மற்றும் கழிவுநீர்க் கால்வாய்கள் புதிதாக அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் திட்டமானது, நெடுஞ்சாலைகள் துறை, பொதுப் பணித் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் மேம்படுத்தப்படும்.

**3) இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் மரம் நடுதல்/நாற்றங்கால் அமைத்தல்/வீட்டு தோட்டங்கள் அமைக்கும் திட்டம்**

மரம் நடுதல்/நாற்றங்கால் அமைத்தல்/வீட்டு தோட்டங்கள் அமைக்கும் திட்டம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

**4) இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் மனநல சேவைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்துதல்**

தமிழகமெங்கும் உள்ள 103 முகாம்களில் வாழும் இலங்கை தமிழர்களின் மனநல மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு, மனநல விழிப்புணர்வை மேற்கொள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் பதிலுரை வழங்கினார்.





விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு சென்னை தெற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட கெடார் முத்துமாரியம்மன் கோயில் அருகில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் ஜெகத்ரட்சகன் எம்.பி ஆகியோர் உரையாற்றினர். இப்பிரச்சாரக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தேர்தல் பணிக்குழு வேளச்சேரி பி.மணிமாறன், மாவட்ட அவை தலைவர் எஸ்.குணசேகரன், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், பகுதி கழகச் செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், கே.கண்ணன், மு.ராசா, சு.சேகர், துரை.கபிலன், நொளம்பூர் ராஜன், வி.இ. மதியழகன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் துரை. வீரமணி, கோவிலம்பாக்கம் வெங்கடேசன் மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.



சேலம் மத்திய மாவட்டம் விக்கிரவாண்டி, தொகுதியில் உள்ள வெங்கந்தூர், சானி மேடு, ஆரியூர் ஆகிய ஊராட்சிகளில் மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.டி.மணி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.குபேந்திரன், பூபதி மாநகரச் செயலாளர் பா.ரகுபதி, வி. கணேசன், ஷெரீப், பகுதிச் செயலாளர்கள் ஆ.ராமச்சந்திரன், சி.பன்னீர்செல்வம், கேபிள் ராஜா, சி.பிரகாஷ், கே.ஜெய், ஒன்றியச் செயலாளர்கள் ரெயின்போ நடராஜன், ஏ.சி.எம்.செல்வகுமரன், ஓ.எம்.ரமேஷ், கே.சி.அறிவழகன், ரவிச்சந்திரன் பேரூர்ச் செயலாளர்கள் தமிழரசன், கே.ஆர்.பிரபாகரன், கே.டி.ஆர்.தனசேகரன். ஏ.எஸ்.சரவணன், முருகன் ஆகியோர் உள்ளனர்.